**O.S.No. 334/2007**

**DW2 :** திவ்யா தேதி 07.04.2026

பிவாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வாதி புவனேஷ்வரி என் தாயார். 2 ம் பிரதிவாதி நிறுவனம் எந்த தேதி மாதம் வருடத்தில் ஆரம்பித்தது என்று எனக்கு தெரியாது. 2 ம் பிரதிவாதி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட போது யார் யார் இயக்குனர்கள் என்று தெரியாது. வழக்கு விவரங்கள் மற்றும் ஆவணங்களை தெரிந்து கொண்டேனா என்றால் படித்து தெரிந்து கொண்டேன். **MOA and AOA** ஆகியவற்றை குறித்து தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்த ஆவணங்களை படித்து பார்த்தேன். 2ம் பிரதிவாதி கம்பெனி ஆரம்பிக்கப்பட்ட போது ராஜாராம், புவனேஷ்வரி, செல்வி, பழனிசாமி, சின்னுசாமி, தங்கம்மாள், சசிகலா ஆகிய 7 பேர் இயக்குனர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். செல்வி பழனிசாமியின் மனைவி. செல்வி தரப்பினராக இல்லை. கோபாலகிருஷ்ணன் இயக்குனர்களாக நியமிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. கோபாலகிருஷ்ணன் உடன் கூடுதல் இயக்குனர்களாக யார் நியமிக்கப்பட்டார்கள் என்று தெரியாது. 2ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு நிர்வாக இயக்குனராக நியமனம் செய்வதற்கு இயக்குநர் குழுவிற்கு மட்டும் தர்ன அதிகாரம் உள்ளது என்று சொன்னால்அது எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி வங்கி 2ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு கடன் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. கடன் கொடுத்த போது என்ன என்ன ஆவணங்கள் 1ம் பிரதிவாதி வசம் ஒப்படைக்கப்பட்டது என்று தெரியாது. பஞ்சநாதன் யார் என்று தெரியாது. செல்வராஜ் வெங்கடேஷ் யார் என்று தெரியாது. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் கம்பெனி செகரட்டரி வெங்கடேஷ் மூலமாக பெற்றேன். வெங்கடேஷ் என்பவர் கம்பெனி செகரட்டரி. 2ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு வெங்கடேஷ் சம்மந்தப்பட்டவர் அல்ல. கோபாலகிருஷ்ணன் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்ட போது

எந்த ஆவணத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டார் என்றால் தெரியாது. கோபாலகிருஷ்ணன் கம்பெனியில் நிர்வாக இயக்குநராக நியமனம் செய்யப்பட்ட போது நானோ என் தாயாரோ மாவட்ட பதிவாளரிடம் ஆட்சேபணை செய்தோமா என்றால் நான் அப்போது இளவராக இருந்தேன் அதனால் அதை குறித்து எனக்கு தெரியாது. பின்னிட்டு தெரிந்து கொண்டேன். நான் மேஜரான பிறகு நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. காவல் துறையில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 2 ம் பிரதிவாதி நிறுவனம் குறித்து பிவாசாஆ 12 ல் நிர்வாகம் சம்மந்தமான விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பிவாசாஆ 12 ல் பக்கம் 39 ல் கம்பெனி நிர்வாகம் சம்மந்தப்பட்ட பிரச்சனைக்களுக்கு தீர்வு காண இயக்குனர் குழுவிற்கு மட்டும் அதிகாரம் உள்ளதாக கண்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. இயக்குநர்கள் குழுவை கூட்டி தீர்வு காண வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 12 ல் உள்ள குற்றசாட்டுகள் சரியானவை என்று சொல்லியிருக்கிறேன். அது சரியானவை என்று எந்த அடிப்படையில் சொல்லியிருக்கிறேன் என்றால் அது எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 11 முதல் 13 வரை உள்ள குற்றசாட்டுகள் உண்மை என்று சொல்லியிருக்கிறேன் எதன் அடிப்படையில் சொல்லியிருக்கிறேன் என்று தெரியாது. விளக்கேத்தியில் உள்ள 2 ம் பிரதிவாதி நிறுவனத்தை சுவாதீனம் எடுத்தற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அது என்ன ஆவணம் என்றால் அமீனா மூலமாக எடுத்தோம். எந்த தேதி மாதம் வருடம் எடுத்தோம் என்றால் 11.4.2012 ல் எடுத்தோம். அதற்குண்டான ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறேன். 2 ம் பிரதிவாதி நிறுவனம் 1 ம் பிரதிவாதி வங்கியில் வாங்கிய கடனுக்காக 1 ம் பிரதிவாதி வங்கி **DRT** எடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதில் நானும் தரப்பினராக இருந்தேன். **DRT** வங்கி தொகையை திரும்ப செலுத்தும் படி உத்தரவான விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1 ம் பிரதிவாதி வங்கியிடம் வாங்கிய கடனை ஏமாற்றும் எண்ணத்தில் என் தாயார் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. பிவாசாஆ 13 ல் **CPA** 2513/2008 யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. **CP** 234/98 மனுவின் நகலை தாக்கல் செய்தால் தான் அது எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் தெரிய வரும் என்றால் அது எனக்கு தெரியாது. **CP** 234/98 என் தாயார் மனு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை நான் ஏன் இந்த வழக்கில் தாக்கல் செய்தேன் என்றால் எனக்கும் என் அக்காவிற்கும் சம்மந்தம் இல்லை என்பதை காட்டுவதற்காக பிவாசாஆ 13 ஐ தாக்கல் செய்திருக்கிறேன். 2ம் பிரதிவாதி நிறுவனத்தை சொத்தை பொறுத்த வரை **official liquidater** நிறுமனம் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. வாதி என் தாயார் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு மாறானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் என்னுடைய சாட்சியத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பாரா 10 ல் அ.வ.எண் 638/98 என்ற வழக்கை குறித்து சொல்லியிருக்கிறேன். அது என்ன வழக்கு என்றால் பாகப்பிரிவினை கோரி இளவராக நான் என் தாய் மாமாவை என் பாதுகாவலராக வைத்து வழக்கு தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. அ.வ.எண் 638/98 ல் 1ம் பிரதிவாதி வங்கி தரப்பினர் அல்ல என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வங்கியின் கடனை ஏமாற்றும் எண்ணத்தில் அ.வ.எண் 638/98 தாக்கல் செய்திருந்தென் என்றால்சரியல்ல. **DRT** தீர்ப்பாய தீர்ப்பின் படி நாங்கள் 1ம் பிரதிவாதி வங்கிக்கு தொகை செலுத்துவதை தவிர்க்கும் எண்ணத்தில் இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.